ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2449/15 - 2025 අගෝස්තු මස 13 වැනි බදාදා - 2025.08.13
2449/15 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (ஒத்திசைவு ஒழுங்கு விதிகள்) சட்டத்தின் 2 ஆம் உறுப்புரையுடன் வாசிக்க வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 வது உறுப்புரையினால் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின் பிரகாரம் வட மத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச ஆகிய என்னால் தயாரிக்கப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

**வசந்த ஜினதாச,**
வட மத்திய மாகாண ஆளுநர்.

அநுராதபுரத்தில்,
2025, யூலை 21.

**கட்டளைகள்**

1). 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் நடைமுறைப்படுத்தும் திகதி தொடக்கம் மூன்று வருடங்களுக்குள் அப்படியாயின் 1990 மே மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் அந்த பிரதேச சபை சட்டத்தின் 23 வது உறுப்புரை பிரகாரம் பிரதேச சபைக்கு உள்பட்டது என கருதும் வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் அந்த சட்டத்தின் 24 ஆம் உறுப்புரையின் கீழ் நிரந்தர குறியீடு மற்றும் எல்லை அடையாளம் இடுதல்; அந்த வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் திட்டங்களை தயாரித்தல் வெளியிட வேண்டியுள்ளதால் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி அறிவித்தல் செய்வது பற்றி குறிப்பிடப்பட்டுள்ள போதும் இது வரை அது பற்றி தேவையான கட்டளைகள் தயாரிக்கப்படாமையினால், அவ்வாறு அறிவித்தல் வெளியிட

1A - PG 7225 — 07 (2025/08)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வேண்டிய காலம் கடந்துள்ள படியால் அதன் விஷேட சந்தர்ப்பத்துக்கு ஏற்ற விடயங்களை கருத்திற்கொண்டு பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் உறுப்புரை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வட மத்திய மாகாண பிரதேச சபைகளுக்கு மேலதிக காலத்துக்கு அனுமதி வழங்குதல் மற்றும் அந்த வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பெயர்ப்பட்டியலை சுட்டிக்காட்டி அறிவித்தல் செய்ய தேவையான ஒழுங்கு விதிகளை விதிக்க மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது ஒத்திசைவான சகல விடயங்களுக்காக ஒழுங்குகளை வழங்க இந்த கட்டளைகள் வெளியிடப்படுகிறது.

2). இந்த கட்டளைகள் வட மத்திய மாகாண பிரதேச சபைகளினால் கொண்டு நடாத்தப்படும் வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் திட்டங்களை தயாரித்தல் தொடர்பான கட்டளைகள் என அறிமுகப்படுத்தப்படும்.

3.). (1) 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (ஒத்திசைவு ஒழுங்கு விதிகள்) சட்டத்தின் 2 வது உறுப்புரையுடன் வாசிக்க வேண்டிய இங்கு இதன் பிற்பாடு ‘ சட்டம்’ என அறிமுகப்படுத்தப்படும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 வது உறுப்புரையின் (1) வது உப உறுப்புரையினால் கிடைக்கப் பெற்ற அதிகாரப் பிரகாரம் அந்த பிரதேச சபைகள் சட்டத்தின் 24 வது உறுப்புரையின் கீழான கருமங்களை ஆற்றிட இந்த கட்டளைகள் அமுலாகும் திகதி தொடக்கம் 12 மாதங்கள் மேலதிக காலம் வட மத்திய மாகாண பிரதேச சபைகளுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

(2). (1) வது உப உறுப்புரையினால் மேலும் அனுமதி வழங்கப்பட்ட 12 மாதங்களுக்குள் அந்த கருமத்தை செய்து முடிக்க இயலாது போகும், இங்கு இதன் பிற்பாடு ‘ சபை’ என அறிமுகப்படுத்தப்படும் வட மத்திய மாகாண ஏதேனும் பிரதேச சபைக்கு அந்த கருமத்தை செய்து முடிவுறுத்த மேலும் காலம் தேவைப்படின் அதற்கான காரணங்கள் பற்றிய விஷேட சந்தர்ப்ப விடயங்களை முன்வைத்து மேலதிக காலத்திற்கு அனுமதி வேண்டுவதற்கு பிரதேச சபைகளுக்கு முடியும்.

4). (1). சட்டத்தின் 23 வது உறுப்புரையின் கீழ் சபைக்குரியதாக அடையாளப்படுத்த வேண்டிய இதன் பிற்பாடு ‘வீதி’ என குறிப்பிடப்படும் வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் அடையாளம் கண்டு வட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் விதிக்கப்படும் படிவத்திற்கு ஏற்ப தயாரித்து அந்த வீதிகள் தொடர்பில் பெயர்ப் பட்டியலொன்றை இதன் பிற்பாடு ‘ உதவி உள்ளூராட்சி ஆணையாளர்’ என அறிமுகப்படுத்தப்படும் மாவட்டத்திற்கு பொறுப்பான உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு முன்வைத்து அதற்கு அவரது உடன்பாட்டை பெற்றுக்கொள்வது தவிசாளரது கருமமாகும்.

(2). சட்டத்தின் 16 வது உறுப்புரையின் கீழ் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது 17 வது உறுப்புரையின் கீழ் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அநுராதபுர மாவட்டத்தின் அல்லது பொலன்னறுவை மாவட்டத்தின் அபிவிருத்தி சபையினால் அளிக்கப்படும் அசையா சொத்துக்கள் என உள்ளடக்கப்பட்ட சகல வீதிகளும், அந்த அட்டவணைக்கு உள்ளடக்க தவிசாளரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(3). (1) வது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் உள்ளடக்கிய வீதிகளில் சபைக்குரியதாக அடையாளமிட உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் உடன்பாடு கிடைக்கப் பெற்ற அனைத்து வீதிகள் தொடர்பாக அறிவித்தல் வெளியிடல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது ஒத்திசைவான கருமங்களை செய்திட இதன் பிற்பாடு உள்ள கட்டளைகளின் ஒழுங்குகளுக்கு ஏற்ப செய்திடல் வேண்டும்.

5). (1) உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் உடன்பாடு கிடைக்கப்பெற்ற சகல வீதிகள் தொடர்பிலும் இதன் முதலாவது அட்டவணையின் மாதிரிக்கு அமைய அடையாளம் காண குறியீட்டு இலக்கம் ஒதுக்கப்பட வேண்டும்.

(2). ஆடையாளம் காணும் குறியீட்டு இலக்கம் ஒதுக்கப்பட்ட சகல வீதிகளும், பின்வரும் தகவல்கள் மற்றும் அதற்குரிய புவியியல் குணகம் தரவுகளை சேகரிக்க தேவையான ஒழுங்கு விதிகள் செய்திடல் தவிசாளரது கருமமாகும்.

i. ஆரம்ப இடம் தொடர்புபடுவது வேறு ஏதேனும் வீதியின் பெயர் மற்றும் அதன் ஆரம்ப இடத்தின் இடது பக்க மற்றும் தெற்கு பக்க புவியியல் குணகம்,

ii. அந்த வீதியுடன் தொடர்புபடும் வேறு ஏதேனும் வீதியிலிருந்து அந்த வீதி செல்வது இடது பக்கமா அல்லது வலது பக்கமா என்பது பற்றி,

iii. வீதி ஊடாக ஓடும் கங்கை, ஆறு, கால்வாய் அல்லது வேறு நீர் வழிக்கு மேல் நிர்மானித்திருப்பது பாலமா, போக்கா, பெட்டி போக்கா, நீர் கடவையா, அல்லது கட்டையா என்பது பற்றியும் அவற்றின் அமைப்பை சுட்டிக்காட்டும் புவியியல் குணகம்,

iv. வீதியின் பாதுகாப்புக்கு நிர்மாணிக்கப்பட்ட ஏதேனும் உப கட்டு அல்லது வேறு ஏதேனும் ஒத்துழைப்பு நிர்மாணிப்பாயின் அதன் ஆரம்ப இடத்தின் மற்றும் இறுதி இடத்தின் புவியியல் குணகம்,

v. வீதியின் ஊடாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வடிகால்களின் ஆரம்ப இடத்தின் மற்றும் இறுதி இடத்தின் புவியியல் குணகம்,

vi. வீதியின் ஊடாக நடப்பட்டுள்ள மின்சார கம்பம் இடையில், வீதி விளக்கு பொருத்தப்பட்டுள்ள மின்சார கம்பம் மற்றும் அந்த இடங்களின் புவியியல் குணகம்,

vii. ஆரம்ப இடத்திலிருந்து இறுதி இடம் வரையான வீதி அபிவிருத்தி செய்வதற்கு மேலோட்டமான தட்டு யாது என்பது பற்றி மற்றும் அந்த மேலோட்ட தட்டு ஒன்றுக்கொன்று வேறுபடும் சகல இடங்களிலும் புவியியல் குணகம்,

viii. வீதியின் நீளம் மீட்டரில்,

ix. வீதியின் சாதாரண அகலம் மீட்டரில்,

x. வீதியின் அகலம் வேறுபடும் சகல இடங்களிலும் இடது மற்றும் தெற்கு பக்க புவியியல் குணகம்,

6). இந்த கட்டளைகளின் கீழ் தயாரிக்கப்பட்ட அனைத்து ஆவணமும் மற்றும் திட்டமும், கந்தவல இலங்கை எனும் குணக கட்டமைப்புக்கு உட்பட்ட புவியியல் குணகங்களை பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும்.

7). ஒவ்வொரு வீதிகள் தொடர்பாகவும் சேகரிக்கப்பட்ட தரவுகள் ஊடாக இரண்டாவது அட்டவணையின் மாதிரிக்கு ஏற்ப, அந்த சகல வீதிக்கும் திட்டம் ஒன்று வீதம் தயாரிப்பது தவிசாளரது கருமமாகும்.

8). இங்கு மூன்றாவது அட்டவணையின் படிவ நிரல்களுக்கு ஏற்ப, உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் உடன்பாடு கிடைக்கப் பெற்ற சகல வீதிகள் தொடர்பிலும் தகவலல்கள் உள்ளடக்கிய ஆவணம் தயாரிக்க ஒழுங்குகள் விதிப்பது தவிசாளரின் கருமமாகும்.

9). (1). சபைக்குரிய வீதிகளாக அடையாளமிடப்பட வேண்டியதாக உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் உடன்பாட்டு கிடைக்கப் பெற்ற வீதிகள், சபைக்குரிய வீதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் சட்டத்தின் 24 வது உறுப்புரையின் (1) வது உப உறுப்புரையின் கீழ் அந்த வீதிகளின் பெயர்ப் பட்டியலொன்றை வர்த்தமானியில் வெளியிட வேண்டும் என சபையினால் முன்மொழிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட வேண்டும்.

(2). (1) வது பந்தியின் கீழ் சபை தீர்மானத்தின் பின், மூன்றாவது ஆவணத்திற்கு ஏற்ப அந்த வீதிகளின் பெயர்ப் பட்டியலொன்றை வர்த்தமானியில் வெளியிடுவது தவிசாளரது கருமமாகும்.

(3) வர்த்தமானியில் வெளியிடப்படும் அந்த அறிவித்தலில் உள்ளடக்கிய ஏதேனும் வீதியின் உரிமம் தொடர்பில் உரித்துடையவர் யாராயினும் ஒரு சாராராயின் சட்டத்தின் 24 வது உறுப்புரையின் (2) வது உப உறுப்புரையின் ஒழுங்கு விதிகளின் கீழ் செயற்பட அந்த சாராருக்கு உரித்து இருத்தல் வேண்டும்.

10). (1). 9).(2) வது கட்டளையின் கீழான அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் அவ்வாறான ஏதேனும் அறிவித்தலில் உள்ளடக்கிய யாதாயினும் ஒரு வீதியின் உரித்து தொடர்பாக உரிய நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் வழக்கு தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய ஆவணம் ஒன்றை வைத்திருத்தல் தவிசாளரின் கருமமாகும்.

(2) எவரேனும் ஒருவரால் இந்த அறிவித்தல் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது பற்றி அந்த நீதிமன்றத்தால் சபைக்கு அறிவிக்கப்படும் அறிவித்தல் கிடைத்தவுடன், அந்த வழக்கு தொடர்பான தகவல்களை அந்த அட்டவணையில் குறித்துக்கொள்ள மற்றும் அந்த வழக்கு தொடர்பில் இறுதித் தீர்மானம் வரை நடப்புகள் பற்றி காலத்துக்கு காலம் அந்த ஆவணத்தை இற்றைப்படுத்த ஒழுங்குகள் செய்வது தவிசாளரது கருமமாகும்.

11). (1) 9 வது கட்டளையின் கீழான அறிவித்தல் மூலம் உறுதியாக குறிப்பிடப்பட்ட இறுதித் திகதிக்கு முன்னர் அந்த அறிவித்தலின் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் ஒரு வீதியின் உரிமம் தொடர்பில் உரிய நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட ஏதேனும் வழக்கு ஒன்றில் அந்த நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை மையப்படுத்தி அந்த வீதியின் எல்லை அடையாளத்தை மாற்றம் செய்தல் மற்றும் அந்த திட்டத்தில் தேவையான மாற்றத்தை செய்ய ஒழுங்குகளை செய்வது தவிசாளரது கருமமாகும்.

12). (1) (அ) 11 வது கட்டளையின் கீழ் தேவையான மாற்றங்களை செய்யவதற்குரிய வீதிகள் மற்றும்,

(1). (ஆ) 9). (2) கட்டளையின் அறிவித்தலுக்கு ஏற்ப வழக்கு தாக்கல் செய்யப்படாத வீதிகள், சபைக்குரிய வீதிகளாக கருதப்பட வேண்டும் என சபை தீர்மானம் ஒன்றினால் எடுக்கப்பட வேண்டும்.

12). (2). (1) வது உப உறுப்புரையின் கீழான முன்மொழிவை நிறைவேற்றுதல் மற்றும் அது பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடல், 9வது கட்டளையின் கீழான அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலம் கடந்த பின்னர் மற்றும் ஆறு மாத காலம் முடிவடைய முன்னர் செய்திடல் வேண்டும்.

(3). 9 (2) கட்டளையின் அறிவித்தல் பிரகாரம் உரிய நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட மற்றும் (2) வது பந்தியின் கீழான அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னர் அந்த நீதிமன்றத்தால் இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்ட யாதாயினும் ஒரு வீதி தொடர்பில் அதன் இறுதித் தீர்மானத்தின் நியதிகளுக்கு அமைய சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தேவையான மாற்றங்களை செய்து, அது தொடர்பில் முன்மொழிவை நிறைவேற்ற சபையினால் நடவடிக்கை செய்திடல் வேண்டும் என்பதுடன் அந்த வீதிகளை உள்ளடக்கிய மேலதிக பெயர்ப்பட்டிலுடன் கூடிய அறிவித்தல் ஒன்றை வர்த்தமானியில் வெளியிடுவது தவிசாளரின் கருமமாகும்.

13). (1). 12 வது கட்டளையின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலில் உள்ளடங்கிய சகல வீதிகளும் சபைக்குரிய வீதியாக கருதப்படுவது சட்ட ரீதியாக இருத்தல் வேண்டும்.

13). (2). சபைக்குரிய வீதியாக கருதப்படும் யாதாயினும் ஒரு வீதி, சட்டத்தின 24 வது உறுப்புரை மற்றும் இந்த கட்டளையின் கீழான வீதியாக பயன்படுத்துதல் முடிவடைந்து போகும் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில், 12 வது கட்டளையின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு திருத்தம் வெளியிடல் தவிசாளரின் கருமமாகும்.

14). சபைக்குரியதாக அடையாளப்படுத்தும் சகல வீதிகளுக்கும் அந்த வீதி தொடர்பில் தகவல்கள் உள்ளடங்கிய இலத்திரனியல் ஆவண கோவை மற்றும் இலத்திரனியல் மென்பொருள் பிரதியில் வீதிகள் தொடர்பில் குறிப்பேடு ஒன்றை தயாரித்தல் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அதை இற்றைப்படுத்துதல் தவிசாளரின் கருமமாகும்.

15). வசனங்கள் தொடர்பில் மாற்றுக்கருத்து தேவைப்பட்டால் ஒழிய, இந்த கட்டளைகளில் -

‘ வீதி’ எனும் வசனத்திற்கு சட்டத்தின் கீழ் சபைக்குரியதானது என கருதப்பட வேண்டிய வீதி ஒன்று, ஒழுங்கை மற்றும் படி வரிசை என கருதப்பட வேண்டியதுடன், அவ்வாறான யாதாயினும் ஒரு வீதியின், ஒழுங்கையின் அல்லது படி வரிசையின் ஒதுக்கம் அதனுடன் தொடர்பான யாதாயினும் ஒரு பாலம், போக்கு ஒன்று , பெட்டி போக்கு ஒன்று, நீர் கடவை, சிறு கடவை, கட்டப்பட்ட அல்லது செதுக்கப்பட்ட கம்பம் அல்லது அது போன்ற கட்டை அதற்கு உட்பட்டது என கருதப்பட வேண்டும்.

‘ வீதியின் மேலோட்ட தட்டு’ என்பது கல் மற்றும் தார் களப்பு, ஒருங்கிணைந்த குட்டி கல், கொன்கிரிட், அஸ்போல்ட் கொன்கிரிட் அல்லது கிரவல் இட்டு செய்யப்படும் அபிவிருத்தி,

‘தவிசாளர்’ என்பது இந்த கட்டளையின் கீழ் செயற்படுத்தப்படும் வட மத்திய மாகாண யாதாயினும் ஒரு பிரதேச சபையின் தவிசாளர்,

16). இந்த கட்டளைகளின் சிங்களம் மற்றும் தமிழ் மொழி வசன நடைமுறைக்கிடையில் ஏதேனும் பொருந்தா தன்மை ஏற்படின் அதன் போது சிங்கள மொழி வசனம் அமுலில் இருத்தல் வேண்டும்.

## முதலாவது அட்டவணை

வீதிகளுக்கு குறியீட்டு இலக்கம் ஒதுக்குதல்.

சபைக்குரியது அடையாளப்படுத்தப்பட்ட ஏதேனும் ஒரு விதிக்கு ஒதுக்கப்படும் குறியீட்டு இலக்கத்திற்கு பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

குறியீடு : மாகாணம் / மாவட்டம் / பிரதேச சபை / பிரதான வீதி / உள்ளூராட்சிக்குரிய வீதி/ துணை வீதி
உதாரணம் : NCP/AP/B247/04/00 அல்லது 08

- மாகாணத்திற்கு ஒதுக்கப்படும் குறியீட்டுக்கு ‘’NCP’ என குறிக்கப்பட வேண்டும்.

- மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் குறியீட்டுக்கு - அநுராதபுர மாவட்டத்திற்கு ‘AP’/ எனவும் பொலன்னறுவை மாவட்டத்திற்கு ‘PL’ எனவும் குறிக்கப்பட வேண்டும்.

- பிரதேச சபை ஒதுக்கும் குறியீடு உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்படும் ஆலோசணைப் பிரகாரம் ஒதுக்கப்பட வேண்டும்.

- பிரதான வீதி என கருதப்படுவது வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிய வீதியாகும். அந்த யாதாயினும் ஒரு நிறுவனத்தினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் அந்த ஏதேனும் ஒரு வீதி தொடர்பில் அந்த வீதிக்கு வழங்கப்பட்ட இலக்கம் இதற்கு பயன்படுத்த வேண்டும்.

- வீதிக் குறியீட்டு அடுத்த இலக்கம் இருக்க வேண்டியது பிரதான வீதியின் பரந்த வீதி தொடர் முறைக்கு ஏற்ப ஒதுக்கப்படும் இலக்கமாக இருத்தல் வேண்டும். இந்த இலக்கமானது இரண்டு இலக்கத்தில் அமைதல் வேண்டும்.

- இங்கு ‘ துணை வீதி’ என கருதப்படுவது உள்ளூராட்சி நிறுவனத்தின் யாதாயினும் ஒரு வீதியில் ஆரம்பித்து பரந்த துணை வீதியாகும். அவ்வாறான துணை வீதியாகும் போது இந்த குறியீட்டின் இறுதி இலக்கம் இரண்டிற்கு இலக்கம் ஒன்று விதிக்கப்பட வேண்டும். துணை வீதியல்லாத உள்ளூராட்சி நிறுவனத்திற்குரிய வீதியாயின் இந்த இறுதி இரண்டு இலக்கமும் ‘00’ ஆக இருத்தல் வேண்டும்.

**இரண்டாவது அட்டவணை**

7 வது உறுப்புரை

வீதியின் திட்டம்

வீதியின் இலக்கம் வீதியின் பெயர் வடக்கு

அட்டவணை

அளவு

தரவு மூலம்:

தயாரித்தது :

திகதி :

குணகம் (கந்தவல இலங்கை)

## மூன்றாவது அட்டவணை

8 வது கட்டளை

வீதிகளின் விபரங்கள் அடங்கிய நிரல்

| தொடர் இல | வீதியின் குறியீடு | வீதியின் பெயர் (இருப்பின்) | ஆரம்ப குணகம் (கந்தவல இலங்கை) | | இறுதி குணகம் (கந்தவல இலங்கை) | | வீதியின் நீளம் (மீட்டர்) | வீதியின் சாதாரண அகலம் (மீட்டர்) | எல்லை குணகம் (கந்தவல இலங்கை) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இடது | வலது | இடது | வலது | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

EOG 08 - 0117